23.01.2026 பி.வா.சா.3 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.178 /2017 ) திருமதி.கோவிலம்மாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>-

1) இந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து சமன் வரவில்லை என்றால் சரிதான். நிருபண வாக்கு மூலத்திற்கான விவரங்கள் வழக்கறிஞருக்கு எனது தகப்பனார் தான் சொன்னார் என்றால் சரிதான். எனது தகப்பனார் வாதியின் தாத்தாவான மாடனான 1978 ல் 16 செண்டு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 16 செண்டில் மேல்பக்கம் 10 செண்டை எனது சகோதரி கோமதிக்கு 30.06.2011 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அது போக எனது அப்பாவுக்கு 6 செண்டு தான் பாத்தியம் என்றால் சரிதான். எனது அப்பா எங்கு இருக்கிறார் என்றால் எனது சகோதரி கோமதியிடம் உள்ளார். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் நான் கோப்ரட்டிவிவ் வங்கியில் கிளார்க்காக வேலை பார்க்கிறேன். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது தகப்பனார் இறந்த பின்னர் உயில் ஊர்ஜிதத்திற்கு வந்தது என்றுசொல்லியுள்ளேன். எனது தந்தை உயிருடன் தான் இருந்துவருகிறார் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் எனது தந்தை இறந்தபின்னர் என்று எழுதியுள்ளது தவறு என்றால் நிருபண வாக்குமூலத்தில் தட்டச்சு செய்யும் போது தவறு ஏற்பட்டுள்ளது. எனது தகப்பனார் அவர் கைவசம் உள்ள 6 செண்டில் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளாரா அல்லது அதற்குஅப்பால் அமைத்துள்ளாரா என்று கூறவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் பிராது தபசில் சொத்து ஆதியில் வாதியின் தாத்தா மாடன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாடன் மகன் தான் பழனி என்றால் சரிதான். பழனியின் மகள் தான் வழக்கின் வாதி லெட்சுமி என்றால் சரிதான். லெட்சுமி எவ்வளவு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் 3 செண்டிற்கு. எனது அப்பா கைவசம் வைத்துள்ள 6 செண்டிற்கு எந்த பக்கம் வழக்கு சொத்து 3 செண்டு எந்த பக்கம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கும் எனது தகப்பனாருக்கும் சம்பந்தமில்லை என்றால் 3 செண்டு என்பது எனக்கு தெரியாது. நான் பொய்யான காரணங்கள் கூறிநிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தை 1980 ல் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளார் என்பது சரியல்ல என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
23.01.2026.